உ

சிவமயம்

# அருச்சுனன் தபநிலை.

இஃது

நாகை வெளிப்பாளையம்;

சைவமகத்துவ வித்தியாசாலை மானேஜர்

மகா-ௗ-ௗ-ஸ்ரீ

ம. இரத்தினசபாபதிநாடாரவர்களால்

ஷை வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

யாழ்ப்பாணம்:

ஸ்ரீமத்.

அ. அருணாசலசாஸ்திரிகளைக்கொண்டு

வடமொழிச் சைவ புராணத்திலிருந்து

மொழிபெயர்ப்பித்து

நாகை

“பெண்ணிங்டன் அச்சுக்கூடத்திற்”

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 3

விஜய௵ தை௴ 1894-௵ ஜனவரி௴

(Copyright Registered)

உ

சிவமயம்

# அருச்சுனன் தபநிஷ்.

இஃது

நாகை வெளிப்பாளையம்;

சைவமகத்துவ வித்தியாசாலை மானேஜர்

மகா-௱-௱-ஸ்ரீ

ம. இரத்தினசபாபதிநாடாரவர்களால்

ஷை வித்தியாசாலைத்தமிழ்ப்பண்டிதர்

யாழ்ப்பாணம்:

ஸ்ரீமத்.

அ. அருணாசலசாஸ்திரிகளைக்கொண்டு

வடமொழிச் சைவ புராணத்திலிருந்து

மொழிபெயர்ப்பித்து

நாகை

"பென்னிங்டன் அச்சுக்கூடத்திற்"

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 3

விஜயஹு தைமீ 1894-ஹு ஜெனவரிமீ

(Copyright Registered)

சிவமயம்.

# முகவுரை.

மகாபாரதத்திற் சொல்லப்பட்ட அருச்சுனன் தபநிலைக்கும் இச்சைவபுராணத்திற் கூறப்பட்ட அருச்சுனன் தபநிலைக்கும் ஒரோரிடங்களிற் சிறிது வித்தியாசங் காணப்படினும் இவை ஒன்றற்கொன்று வித்தியாசங்களாகக்கருதப்படா. ஏனெனில் "எதிலாக்கற்ப மெண்ணில சென்றன-ஆதலாலிக்கதையுமநந்தமாம்-பேதமாகும்" என்றபடி இவை கற்பபேத வித்தியாசமென்று அறியத்தக்கன.

பிரமாவின் ஒருகற்பத்திலே பதினாலு இந்திரர்கள் பிறப்பார்களென்றும், ஒரு இந்திரன் காலத்தில் அநேக இராமாவதாரம் அநேக கிருஷ்ணாவதாரம் முதலியன உண்டாகும் என்றும் மகாபாரதமே கூறுதலினால், அவதாரம் அநேகம்என்பதும், அவ்வவதாரங்களில் முன்னதற்கும் பின்னதற்கும் அபிப்பிராயம் ஒன்றாயிருக்குமேயன்றி நடக்கும் முறைமை முதனூலுக்கும் வழிநூலுக்கும் உள்ளமுறைமைபோலச்சிறிதேவேற்றுமை யுடையது என்பதும் எவரும் ஒத்துக்கொள்ளும்விஷயமாம். ஆதலினால் இவை ஒன்றற்கொன்று விரோதமுடையனவாக எண்ணப்படா.

இந்நூல் அநேக நீதிகளையும் அநேக விஷயங்களிற் சந்தேக நிவிர்த்திகளையும் காட்டிச் சிவபெருமானே பரமபதி என்றும், அவரே சகலராலும் வழிபடப்படுபவர் என்றும், அவரையே நாம் வழிபடவேண்டும் என்றும், அவரை வழிபட்டோமாயின் அவரே வேண்டிய வேண்டிய பயன்களை

கொடுப்பார்என்றும் விளக்குதலிலுமே,இஃது நம்மவர் யாவராலும்அத்தியாவசியகமாய்வாசித்துணரவேண்டிய நூலாகும்.

☞ இப்புஸ்தகம் வாங்க விரும்புவோர் நாகைவெளிப்பாளையம் சைவமகத்துவ வித்தியாசாலை முதலுபாத்தியாயரிடத்திலும், யாழ்ப்பாணம் இந்துசாதன பத்திராதிபரிடத்தும், நாகபட்டணம் பெரியகடைத்தெரு புஸ்தகவியாபாரம் மகா-ள-ள-ஸ்ரீ-சி. சுப்பிரமணியபிள்ளையிடத்தும்விலைக்குப்பெற்றுக்கொள்க.

ஒரேமுறையில் பத்துப்புஸ்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புஸ்தகம் கம்மிஷன் கொடுக்கப்படும்.

## இனி அச்சிடப்படும் புஸ்தகங்கள்.

சைவபுராணம் ஞானசம்மிதை
சிவலிங்க ரூபம்
சிவராத்திரி மான்மியம்
நீதிநெறிவிளக்கம் மூலமும் உரையும்
ததீசி உத்தரம் சத்தியரூபம்
பாலபாடம் 2 ம் புஸ்தகம்
,, 3 ம் புஸ்தகம்

இங்ஙனம்

ம. இரத்தினசபாபதி நாடார்.

உ

சிவமயம்.

# அருச்சுனன் தபநிஷ்.

நால்வகைத் தோற்றத்தெழுவகைப் பிறப்பினையுடைய எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிவாய்ப்பட்டுப் பிறப்பன யாவை அவையெல்லாஞ் சீவவர்க்கம். அவ்வாறு பிறத்தலில்லாதது யாது அதுவே பதிப்பொருள் என்னும் இதுவொன்றே ஏனைச் செயல்களான் வேற்றுமையறிய வராத அவ்விரண்டற்கும் தம்முள் வேற்றுமையறிய நிற்பது ஆகலின், ஏனைத் தேவரெல்லாம் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படுதலானும் சிவபெருமானுக்கு அப் பிறப்பிறப்புகள் உண்டென்று எவ்விடத்தேனுங் கேட்கப்படாமையினுலும் சிவபெருமான் ஒருவரே வினைவயத்தனுதலின்றி அவ்வத் தேவரிடமாக நின்று உயிர்களுக்கு அவற்றையறிந்து கூட்ட வல்லவராயிருக்கின்றுர். அவரே எல்லா முதன்மையுமுடையவர்; அவரே எந்த எந்த ஆன்மாக்களுக்கும் அவரவர் வேண்டிய வேண்டிய வரங்களைக் கொடுப்பவர். அவரைச் சேவித்தவிடத்தே சகல பயன்களையும் ஒருவனடைவான். அவரே விச்சுவாதிகரும், விசுவசேவியரும் பக்தர்களுக்கு அருள் செய்பவரும் என்பது பதினெண் புராணங்களுள் நாலாவதாய்ச் சிவபுரா

ணம் பத்தனுள் முதற்கணுள்ளதாய சைவபுராணத்து ஞானசங்கிதையின் அருச்சுனன் தபஸை எடுத்துக் கூறும் 63, 64, 65, 66, 67 என்னும் அத்தியாயங்களா லினிதாகஅறியக்கிடக்கின்றது. அதுவருமாறு:—

திருதராஷ்டிரன் குமாரனுகிய துரியோதனன் சூது போர் செய்து பஞ்சபாண்டவர்களுக்குரிய இராச்சியம் முழுதையும் அபகரித்தபின்பு, அத்துரியோதன னுக்குத் தோற்ற அப் பஞ்சபாண்டவர்களும் கற்பிற் சிறந்த திரௌபதியுடனே சென்று, தன்னிடத்தில் வசிப்பவருக்குப் பசிதாகங்களை நீக்குதலினுலே துவைத வனம் என்றழைக்கப்படும் வனத்தை யடைந்து, அவ் வனத்தின் பிரபாவத்தினுலே தமக்குப் பசிதாகங்களி ல்லையானுலும் பஞ்சமகாயஞ்ஞங்களை முடிக்கும்பொருட்டுச் சூரியனை நோக்கித் தபஞ் செய்து அக்ஷய பாத்திரம் பெற்று, அவ் வனத்திற் சுகமாயிருந்து காலங் கழித்துவந்தார்கள்.

இப் பாண்டவர்கள் குறித்த காலமளவும் வனவாஸஞ் செய்து அதன்பின் தமக்குரிய இராச்சியத்தைப் பெறவுங் கூடுமாதலால், இவர்களைவனவாஸஞ் செய்யும்பொழுதே கொன்றுவிடவேண்டுமென்றுஅத்துரியோதனன் யோசித்துக், கோபமுனிவராகிய துருவாசரை யழைத்துத் தகுந்த உபசாரஞ் செய்து, "சுவாமீ தேவரீர் வனவாஸஞ் செய்யும் பாண்டவர்களுக்குச் சாபமிட்டுவரவேண்டும்" என்றுசொல்லி அனுப்பினுன். அத் துருவாஸ முனிவர் பதினுயிரஞ் சீஷரோடும் அப்பாண்டவரிடம் வந்து, "மனம் விரும்பியபிரகாரமே நாம்

போஜனம் பண்ணவேண்டும்" என்று அவர்களைக் கேட்டார். உடனே அப் பாண்டவர்கள் அவர்களை ஸ்நானஞ் செய்துவரும்படி யனுப்பிவிட்டு, அவ்வளவு இருஷிகளுக்குங் கொடுக்கஅன்னமில்லாமையினாலே துக்கமுடையவர்களாய்த் தங்கள் பிராணனைவிட முயன்றார்கள். அப்பொழுது திரௌபதிகிருஷ்ணரை வரும்படி நினைக்க, அந்த க்ஷணமே அவர் வந்து பாண்டவர்களுக்குச் சித்தியுண்டாக்கும்பொருட்டுத் தாம் சாக†த்தைப் பக்ஷித்து அதிதிபோஜன*த்துக்குவந்தஅம்முனிவர்களுக்குத்திருப்தியையுண்டாக்கினர். அக்கிருஷ்ணர்செய்த சாகபக்ஷணத்தினாலே தன்சீஷரெல்லாந்திருப்தியடைந்தமையை யறிந்த துருவாச முனிவர் தமது எண்ணம் பலிக்காமையைக் கண்டு, "பகவான் எவரிடத்தில் மகிழ்ந்தாரோ அவருக்கு எப்படிக் குறைவுவரும். எவருக்குப் பகவானுடைய கிருபையிருக்குமோ அவரே பூச்சியர் அவரே கிருதார்த்தர்" என்றுசொல்லிமிகுந்த சந்தோஷத்தோடு போயினர்.

துருவாச முனிவர் போனபின்பு அப் பாண்டவர்கள் கிருஷ்ணரை நோக்கி, பிரபுவே! எங்கள் சத்துருவாகிய துரியோதனனோ பெலவானாயிருக்கின்றான் நாங்கள் என்ன செய்வோம்; இனி என்ன ஆகப்போகின்றது என்று கேட்டார்கள். அது கேட்ட கிருஷ்ணன் பாண்டவர்களே! நீங்கள் நான்சொன்னபடிநடவுங்கள். முன்னொருகாலத்தில் நான் துவாரகைக்குப் போய்ச் சத்துருக்களை வெல்ல விரும்பி, அதற்கேற்ற வழிகளை

†சாகம்=இலைக்கறி. *அதிதிபோசனம்=விருந்துணவு.

யாராய்ந்து, மகான்மாவாகிய உபமன்னியு முனிவரிடத்திலே சிவதீக்ஷைபெற்று வடுக பர்வதத்திலிருந்து ஏழு மாதமளவும் சிவபெருமானைப் பூசித்தேன். அச்சிவ பெருமான் எனக்குப் பிரஸன்னராகி இஷ்ட போகங்களை யீய்ந்து அவ்வடுகபர்வதத்தின் முழைஞ்சில்‡ வில்வேசுரர் என்னுந் திருநாமமுடையவராய் எழுந்தருளியிருக்கின்றார். அவருடைய பிரதாபத்தினாலே எனக்குத் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலன சாமர்த்தியமெல்லா முண்டாயின. போக மோக்ஷங்களைக் கொடுக்கும் அச் சிவபெருமானையே இப்பொழுதுஞ் சேவித்து வருகின்றேன். சர்வான்மாக்களுக்கும் சகலசுகங்களையுங் கொடுக்கும் பரமகருணாநிதியாகிய அச்சிவபெருமானையே நீங்களுஞ் சேவியுங்கள். உங்களுக்குநன்மையுண்டாகும் என்று சொல்லி, அப் பாண்டவர்களைச் சிவபூசை செய்யும்படி மனத்தை ஒருப்படுத்தி மறைந்தருளினார்.

அதன்பின் பாண்டவர்கள் அத்துரியோதனனுடைய குணங்களைப் பரீக்ஷித்தறிந்துவரும்பொருட்டு இரகசியமாக ஒரு வேடனையனுப்பினார்கள். அவ் வேடன் சென்று துரியோதனனுடைய ராஜதானியில் நிகழ்ந்த அவனுடைய குணங்களை நன்றாயறிந்து அப்பாண்டவர்களுக்குச் சொல்ல, அப்பஞ்சபாண்டவர்களும் அதுகேட்டு, நாங்கள் என்ன செய்வோம்; எங்கே போவோம்; நாங்களோ சத்திய பாசத்தினாற் கட்டப்பட்டிருக்கின்றோம்; என்று சொல்லித் துக்கமுற்றார்

‡ முழைஞ்சு=குகை

கள். அப்பொழுது வியாச முனிவர் சடாமுடியினால் அலங்கரிக்கப்பட்டவரும் அளவிறந்த தேஜஸுடைய வருமாய்த் தர்மமே வடிவெடுத்தாற்போன்று அங்கே வந்தார். பாண்டவர்கள் அது கண்டு மகிழ்ந்து எதிர் சென்று அழைத்துவந்து, தருப்பையினாலும் மான்றோலினாலுமாகிய ஆசனத்தில் அவரை இருத்தி விதிப்படியே பூசித்து, நாநாவித ஸ்தோத்திரங்களினாலே அவரைச் சந்தோஷிக்கச் செய்து, சுவாமீ தேவரீரைத் தரிசிக்கப்பெற்றுக்கொண்டமையினாலே நாங்களே பூச்சியர்கள்; இன்றைக்கே எங்கள் சென்மமும் எங்கள் நித்ய கர்மம்முதலியவைகளும், எங்கள்தேவர்களும், தபமும், தானமும், யோகமும், முன்பு செய்த அநேக தானங்களும், அநேகவிதமான பூசைகளும் பயனடைந்தன; ஓ பிதாமகரே! துஷ்கருமமுடைய துரியோதனன்முதலிய துஷ்டர்கள் அடியேங்களுக்கு மிகுந்த துன்பஞ் செய்தார்கள், அத்துக்க முழுதும் உம்மைத் தரிசித்த மாத்திரத்தில் தூரத்திலே நீங்கிவிட்டன; தேவரீரை ஒத்த மகான்களைத் தரிசித்தமாத்திரத்தில் ஒரு காலத்தும் நீங்காதிருந்த துக்கங்கள் நீங்கிவிடும்; இதிற் சந்தேகமில்லை; சமஸ்த கர்மங்களையும் முடிக்கும் மகான்களுடைய சகவாசமுள்ளவிடத்துந் துக்கம் நீங்காதிருக்குமாயின் அதற்கு ஊழே காரணமாகும். மகான்களைத் தரிசித்தவிடத்துத் துக்க காரணமாகிய தரித்திரத்தை எவனடை; வான்எளியவர்களை ரக்ஷிக்கின்றதுவே மகான்களுக்குச் சுபாவமாகும்; அம்மகான்களுடைய மகிமையோசத்தியமுடையதாயிருப்பதினாலே

அவர்களுடைய குணங்கள் அறிதற்கரியன; ஒருவன் கீழோருடன்சகவாசஞ்செய்தலினாலேஎளிமையையும், மகான்களுடன் சகவாசஞ் செய்தலினாலே பெருமை யையும் அடைகின்றான்; இதிற் சந்தேகமில்லை. எளி யவர்களை ரக்ஷித்தல் என்னும் இதுவே உத்தமர்களுக் குச் சொபாவமாகும்; உலகத்திலே தரித்திரனை இர க்ஷிப்பதே மிகவும் மேலாகிய புண்ணியமாகும்; சற் சனர்களைச் சேவித்தலே புருஷனுக்கு உயர்ந்த பல சா தக§ மாயுள்ளது; இப்படிச் சேவித்தவிடத்துந் துக்கம் வருமென்றால் அதற்கு நாம் முன் தேடிய தீவினையே காரணமென்று எண்ணவேண்டும்; அந்தத்தீவினையினா லே துக்கம்வந்ததாயினும் மகான்களைச்சேவித்தலாகிய முயற்சி தீமையையுண்டுபண்ணாது, ஆதலால் தேவரீ ரைத் தரிசித்தமையினாலேஅடியேங்களுக்கு எப்பொழு தும் சுபமேயுண்டாகும்; தேவரீர் வந்தமாத்திரத்தில் அடியேங்களுடையமனம் சந்தோஷித்ததுஎன்றார்கள்.

வியாசமுனிவர் பாண்டவர்களை நோக்கி அன்பர்க ளே! நீங்கள் பூச்சியர்களுங் கிருதார்த்தர்களுமாயிருக் கின்றீர்கள். இதுவே சற்சனர்களுக்குச் சொபாவம். இதுவே பிராணன் நீங்கியபின்னும் மிகவும் பிரகாசிப் பது. நீங்களோ தருமவான்களாயும் சத்தியவான்களா யும் இருக்கிறீர்கள். நீங்களும் துரியோதனன் முதலி யோரும் எங்களுக்குச் சம்பந்தத்தினால் ஒத்தவர்களா யிருப்பினும் உங்களையொத்த தர்மிஷ்டரிடத்தில் நாங் கள் பக்ஷமுடையவர்களாயே இருத்தல்வேண்டும்; இத

§ சாதகம்=முடிப்பது.

வே பெரியோர்களுக்குச் சம்மதம். உங்கள் சத்துருக்கள் தர்மிஷ்டரல்லரோ? எனின், உங்கள் பெரியபிதாவாயுள்ள திருதராஷ்டிரன் கண்ணோடுகூடத் தருமத்தையும் இழந்து ஆசையினாலே உங்கள் இராச்சியத்தையுங் கவர்ந்தான். அத் திருதராஷ்டிரனுக்கு நீங்களும் அவர்களும் புத்திரர்களே! உங்கள் பிதாவாகிய பாண்டு என்பவன் இறந்தபொழுது அத்திருதராஷ்டிரனுக்குத் தன் பிள்ளையிற்போலச் சகோதரன்பிள்ளைகளாகிய உங்களிடத்தும் அருளுண்டாகவேண்டும். உங்களுக்குத் துரியோதனன் கேடுசெய்தவிடத்து ஒருபொழுதாவது அவன் தடுத்திலன். அத்திருதராஷ்டிரன் தடுக்காதிருந்தமையினாலே இப்பொழுதுஎவ்வளவோகெடுதிகள் உண்டாயின. நடந்த சம்பவம் முழுதும் நடந்ததேயன்றி இனி நடவாததாகாது. இத்திருதராஷ்டிரனோ அஷ்டன், நீங்களோ தர்மிஷ்டர்கள், சத்தியம்பேசுபவர்கள், ஆதலால், சுபகர்மத்தின் அந்தத்திலேசுபபலமே மேன்மேலும் உண்டாகும். நிலத்திலே எந்தவிரை விரைக்கப்பட்டதோ அந்த விரையின் முளை உண்டாகுமென்பது நிச்சயம். ஆதலால், நீங்கள் துக்கமடைய வேண்டாம்; உங்களுக்குஎந்தவழியும் சுபபலமேயுண்டாகும்; என்று சொன்னபொழுது, அப்பாண்டவர்கள் பின்னும் வியாஸமுனிவரைநோக்கி, "சுவாமீ தேவரீர்சொல்லியவையெல்லாம் உண்மையே, நாங்கள் நாடுகளை யிழந்து காட்டிலிருக்கும்பொழுதும் துஷ்டர்களாகிய துரியோதனன் முதலியோர் எங்களுக்கு அடிக்கடி துக்கத்தை விளைக்கின்றார்கள்; பிரபுவே அவர்கள் செய்யுஞ்

செயல் நாசமாகும்பொருட்டுத் தேவரீர் அடியேங்களுக்கு நல்வழியொன்றைச்சொல்லியருளவேண்டும், முன்பு கிருஷ்ணரும் எப்பொழுதும் சிவனையேஆராதியுங்கள் என்று சொல்லிச் சென்றார், இந்நாள்வரையும் நாங்கள் சிவாராதன மில்லாதவர்களாயே யிருந்தோம்; சிவாராதன விதியை அடியேங்களுக்கு இப்பொழுதே உபதேசித்தருளும்" என்று கேட்டார்கள்.

வியாதமுனிவர் அதுகேட்டுச் சந்தோஷமுடையவராய், ராஜசிரேஷ்டர்களே கேளுங்கள், நானும்சிவனைச்சேவிக்கின்றேன்; நீங்களும் அவரையே சேவியுங்கள், உங்களுக்கு அழிவில்லாத சுகம் உண்டாகும் என்று சொல்லி, இவ்வைவருள்ளும் நராவதார முடைமையினாலே முன்னுந் தவஞ்செய்து சித்திபெற்றவனும் அருச்சுனனே என்று அவ்வருச்சுனனையே ஆராய்ந்து நிச்சயித்துத், தவஞ்செய்யுந் தானத்தையும் அறிந்து, பின்னருஞ் சொல்லுகின்றார்.

பாண்டவர்களே, நன்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்; பிரமாமுதல் புல்ஈறாகக் காணப்பட்ட ஜகத்து முழுதும் சிவரூபமாகப் பார்க்கப்படுவதும் தியானிக்கப்படுவதுமாயிருக்கின்றது. அதனால், சகலராலுஞ் சேவிக்கப்படுஞ் சங்கரனே சகல துக்கங்களையும் போக்குபவர். விஷ்ணு ஸர்வ ஸேவியராகாரோ வெனின் அவரும் அச்சிவபெருமானுடைய அற்புதமான அம்மையாம். அச்சிவபெருமானுடையஅற்புதமான அம்மாகிய அவ்விஷ்ணுவைவழிபட்டவிடத்து அவர்அருள் செய்யாரோஎனின்; அவ்விஷ்ணுவும் நெடுங்காலஞ்

ன்றபின்னரே அருள்செய்வாரென்பதுநிச்சயம். சிவபெருமானோ சுவல்ப்பகாலத்திலேயேமகிழ்ந்துபோக மோக்ஷங்களைக் கொடுப்பார். இதிற் சந்தேகமில்லை. ஆதலால்போக மோக்ஷபலங்களைப் பெற விரும்புபவர் சிவபெருமானையே சேவிக்கவேண்டும். இந்திரன் விசுவாமித்திரர் முதலியோருடைய தபத்துக்குக் கேடுசெய்தமைபோல எங்கள் தபத்திற்குங் கேடுபண்ணு வானோ என்பீராயின், அவ்விந்திரன் தன்பதத்தை யபகரிக்க விரும்புகிறவர்களின் தபத்தை மாத்திரங் கெடுக்கமுயல்வானன்றிப் பூலோகத்தை யாளவிரும்பும் அரசனுடைய தபத்துக்குஒருபொழுதும்விக்கினஞ்செய்யாது, அவனுக்கு இதஞ்செய்பவனாய் மகிழ்வான், அன்றியும், அவ்விந்திரன் பூமியை யாளவிரும்பும் அரசன் செய்யும் தபத்துக்கு மகிழ்ந்து பின்பு அவனுக்குச் சிவமூல மந்திரத்தையு முபதேசிப்பான் என்றுசொல்லி, அருச்சுனனையழைத்து, அவனுக்கு இந்திர வித்தையை யுபதேசித்தார். அருச்சுனன் ஸ்நானஞ்செய்து, கிழக்கு முகனாயிருந்து, அவரிடத்துஅம்மந்திரத்தைவிதிப்படி கேட்டான். பின்னரும் அவ்வியாச முனிவர் அவ்வருச்சுனனுக்குப்பார்த்திவலிங்க பூசாவிதியையும் உபதேசித்து, முன் இந்திரனைப் பூசித்து அவனிடத் தனுமதி பெற்றுக்கொண்டுபின்னரேசிவபெருமானைப் பூசிக்கக்கடவாய் என்றுபணித்து, அருச்சுனா, நீ இப்பொழுதேபுறப்பட்டு இந்திரகீல பர்வதத்திற்போய்க் கங்காதீரத்தி லிருந்து எல்லா ஆயுதங்களையுந் தாங்கித் தபத்துக்கு இடையூறு செய்வோருக்குச் சிறிதும் இடங்கொடாமல், அச்சிவ

பெருமானையே தினந்தோறும் தோத்திரஞ்செய்து தபஞ்செய்யக்கடவாய்என்றுசொல்லி, இத்தபம் பிறராற் கெடுக்கக்கூடாதபடி இதஞ் செய்வதாகிய ஓர் மந்திரத்தையும்அவனுக்கு உபதேசித்து ஆசீர்வதித்து, மற்றையோர்களைப் பார்த்து, இராஜ சிரேஷ்டர்களே, நீங்கள் யாவரும் தர்மத்தையனுஷடித்து நில்லுங்கள், உங்களுக்கு எவற்றினும்மேலாகிய சித்தியுண்டாகும், இதிற்சந்தேகமில்லை, என்று ஆசி* சொல்லி மறைந்தருளினர்.

அருச்சுனன் வியாஸமுனிவரிடத்துச் சிவமந்திரத்தைப் பெற்றமையினாலே அளவிறந்த தேஜஸுடையவனாய் மிகவும் பிரகாசித்தான். பாண்டவர்கள் அவ்வருச்சுனனுடைய தேஜஸைப்பார்த்து, உடனேபலங்காணப்படுதலால் அவ்வியாதமுனிவருடைய வாக்கில் நிச்சயபுத்தியடைந்து, அருச்சுனனை நோக்கிச், சகோதரனே நீ வியாதமுனிவர் பணித்தபடியே இக்காரியத்தைச்செய்து எங்கள் வாழ்வைப்பலனுடைய தாக்கு, உன்னையன்றிவேறொருவராவதுஒருபோதும்இக்கருமத்தைச்செய்யமாட்டார்கள் என்று தங்காரியம் நிறைவடையும்பொருட்டு அவ்வருச்சுனனைத்தபத்துக்கு அனுப்பதலில் விருப்பமுடையராயினும் பிரிதற்றுக்கத்தினால் பயமுடையராய் விருப்பமில்லாதவர்களாகியும் அவனை அம்மலையிற் சென்றுதபஞ்செய்யும்படியனுப்பினார்கள்.

அப்பொழுது திரௌபதி அதிக துக்கமுடையவளாகிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஓ அரசனே, நீர் இவ்விஷயத்தில் முயற்சிசெய்து எங்களுக்

* ஆசி=வாழ்த்து

க்ஷேமத்தைச் செய்யவேண்டும்என்றுசொல்லி அவனை யனுப்பினாள். தருமர் முதலிய ஐவரும்அருச்சுனனைத் தபஞ்செய்யும்படியனுப்பிவிட்டு, அவன்மேற்கொண்ட ஆசையினாலே ஒருங் கூடி, மிகுந்த துயரங் கொண்டு, துக்கம்வந்தவிடத்து விரும்பிய பொருள்வந்து சேர்ந்தாயின் அது அத்துக்கத்தைப் பரிகரிக்கும்; இஷ்டமானவஸ்து பிரிந்தவிடத்து அதனால் உண்டாகுந் துக்கம் இருமடங்கு அதிகமாகும்; ஆதலால், அருச்சுனனைப் பிரிந்தவிடத்து எங்களுக்கு எப்படித்தைரியம் உண்டாகும் என்றுசொல்லித் துக்கமுற்றிருக்கும்பொழுது, அவர்களிடத்திற் பின்னரும் வியாதமுனிவர் வந்தார்.

அவரைப் பாண்டவர்கள் எதிர்கொண்டு நமஸ்கரித்து, ஆஸனத்திலிருத்திப் பூஜை செய்து, "இருஷிசிரேஷ்டரே கேட்டருளும், துக்கத்தினற் றகிக்கப்பட்டவர்களாகிய நாங்கள், சுவாமீ! தேவரீரைத் தரிசிக்கப்பெற்றமையினாலேமிகவும்ஆனந்தமடைந்தோம். எங்கள் துக்கம் ஒழியும்பொருட்டுத் தேவரீர் இன்னுஞ் சிலநாள் எங்களுடனே இருக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முனிவரும் அவர்களுக்குச் சுகமுண்டாகும்பொருட்டு அங்கு இருந்து, அநேக கதைகளைச் சொல்லி அவர்களுடைய துக்கங்களை நீக்கினர்.

இப்படியிருக்கின்ற வியாஸ முனிவரைத் தருமர் நமஸ்கரித்து, "ஓ இருஷி சிரேஷ்டரே! தேவரீர் செய்யுங்கதாப் பிரஸங்கத்தினாலே என் துக்கம் சாந்தியாகின்றது; மகாவாகுவே! மகாப்பிரபுவே! இப்படிப்பட்ட

துக்கத்தை முன்னே எவனடைந்திருக்கின்றான்; நாங்களே பெருந்துக்கத்துக்குப் பாத்திரரானோம்; வேறொருவராவது இப்படிப்பட்ட துக்கத்தை யனுபவித்திலரா? என்றுகேட்க, வியாஸமுனிவர் சொல்லுகின்றார்.

"தருமனே, உன் துக்கமோ அற்பமன்று. முன்னே மகான்மாவாகிய நள மகாராஜனுக்கும் அரிச்சந்திரனுக்கும் இராமஸ்வாமிக்கும் உண்டான துக்கத்தை என்னாற் சொல்ல முடியாது. ஒருவன் முதலில் இந்தச் சரீரத்தைத் துக்க சொரூபமென்று நினைந்து இப்பொழுதே துக்கத்தை நிவிர்த்திக்கவேண்டும்; சரீரத்தைத் தாங்கினவன் நிச்சயமாய்த்துக்கத்தை யடைகின்றான்; பிறந்தவனுக்கு முன்னர் மாதாவின் கருப்பத்திலிருக்கும்பொழுதே துக்கமுண்டாகின்றது; அதன்பின், யௌவனகாலத்திலே அவன் இஷ்டானுபவங்களை யநுபவிக்கும்பொழுது துக்கரூபியாகின்றான்; பின்பு நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிதல் வருதல்களினாலும், ஜீவனம் முதலியவற்றிற்கனுகூலமான அநேகவியாபாரப் பெருக்கங்களினாலும் அவனுக்கு ஆயுசுநித்தமும் விருதாவாக அழிந்து போகின்றது; விருதாவாக ஆயுசு அழிவதை அவன் அறிகின்றிலன்; முடிவில் மரணமுண்டாகின்றது. ஆதலால், இச்சரீரம் முதலியன அநித்தியம். நீ சத்திய விரதத்தை யனுஷ்டி. சிவபெருமான் மகிழ்தற்கேற்ற பிரகாரமாகவே மனுஷன்அவரை வழிபடவேண்டும்; அவரை வழிபட்டவன்சகல துக்கங்களையும் நீக்குகின்றான்" என்றார்; தருமர்முதலியோர் இவ்வாறே நா

வித ஞான சிரவணங்களினாலுந் தத்தமக்கு விரும்பிய ஆராதனங்களினாலுங் காலங்களைக் கழித்தார்கள்.

வியாஸமுனிவருடைய சொற்படியே அருச்சுனன் தபஞ்செய்யப் புறப்பட்டுத், தனக்குச் சீக்கிரம் இஷ்டபலப் பிராப்தியைக் குறிப்பிக்குஞ் சுபசகுனங்களைக்கண்டு, இனிச் சத்துருக்களுக்கு நாசமுண்டாகும் என்று நிச்சயித்துக், கங்காதீரத்திலுள்ள சிறந்த இந்திரகீலபர்வதத்திலே மனமகிழ்ச்சியுடனே சென்று, சுவர்க்கலோகத்துக்குச் சமமான அசோக வனத்தையுடைய நல்ல ஸ்தானத்திலே தபஞ்செய்தற்குரிய இடம் பார்த்திருந்துகொண்டு, முன்னரே குருவாகிய வியாஸமுனிவரைத் தியானித்து நமஸ்காரஞ் செய்து, அவர் விதித்தபிரகாரமே விபூதி ருத்திராக்ஷங்களை யணிந்து, சமசூத்திரப்பிரகாரம்† பார்த்திவலிங்க‡ மமைத்து எதிரிற் ருபித்துப் பூசை செய்து, அதன்முன்னரிருந்து, மேலானவராகிய சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு செபஞ்செய்து,இப்படியே தினந்தோறுந் திரிகாலங்களிலும்ஸ்நாநஞ்செய்து நாநாவிதமான பூசைபண்ணி, அவரையேஉபாஸித்து, மிகக்கடினமாகிய தபஞ்செய்தான். அப்பொழுது, அவனுடைய சிரசினின்றும் அக்கினிச் சுவாலைவெளிப்பட்டுத் தேவலோகமளவுஞ்சென்றுதேவர்களைவருத்திற்று. அதனைத்தேவர்கள்கண்டுபயந்து,இவ்விடத்தில் இந்தத்தபத்தி எப்பொழுதுவந்தான்

---

†சமசூத்திரம்=இலிங்கத்துக்குச்சொல்லியஅளவு
‡ பார்த்திவலிங்கம்=மண்ணினாலாய சிவலிங்கம்

என்றுசொல்லி, இதனைச் சொல்லும்பொருட்டு இந்திரனிடஞ்சென்று, "அரசனோ தேவனோ, அல்லது இருஷியோ, அல்லதுசூரியனோ, அல்லது அக்கினியோ, தெரியாது ஒருவன் வந்து, உன்வனத்திற் றபஞ்செய்கின்றான்; அவனை நாங்கள் அறியோம் அவனுடைய தேஜஸினாலே நாங்கள் தகிக்கப்பட்டு உமது சந்நிதியையடைந்தோம்" என்று சொன்னார்கள்.

இந்திரன் தன் புத்திரனாகிய அருச்சுனனுடைய கருத்தையறிந்து, அதனை ஒருவருக்குஞ் சொல்லாது, அவர்களைப் போகும்படிஉத்தரவு செய்து,கண்டோருக்கு அதிசயத்தைவிளைப்பதாய்ச்சடா முடியையுடையவிருத்த வேஷமெடுத்து, மிகுந்த நரையையுடையவனாய், மான்றோலாலாகிய உத்தரீயமணிந்து,தண்டையூன்றிக் கொண்டு, கால்வைக்குந்தோறும் விழுந்து விழுந்து அவ்விந்திரகீல பர்வதத்திற் சென்றான். இப்படியே விருத்தவேஷங்கொண்டுவந்த இந்திரனுக்கு அவ்வருச்சுனன் பூசை செய்து எழுந்துநின்று தோத்திரஞ்செய்து, "ஓவிருத்தரே, இப்பொழுது எங்கேவந்தீர் சொல்லும்" என்ற அளவில், அவன் அவ்வருச்சுனனைநோக்கி அவனுத்குத் தைரியம் விருத்தியாகும் பொருட்டு "சுவாமீ, இளம்வயசிலே இப்பொழுது என்ன தபஞ்செய்கின்றீர்; நீர் செய்யுந்தபம் வெற்றியைவிரும்பியது போன்றிருக்கின்றதேயன்றி முத்தியைவிரும்பியதாயிருக்கவில்லையே" என்றான். பின்பு அவன் அவ்வருச்சுனனுக்குத் தன் கருத்தை யறிவிக்க; அவ்விந்திரன் அவனைப் புகழ்ந்து, "சுவாமீ, இம்மைச்சுக

தைக்குறித்துத் தபஞ்செய்கின்றீர், இதுகூடாது, இந்த லௌகிக சுகம் சுவப்பினம்போல அழியுந் தன்மைத்தாதலால் அதன் பொருட்டுத் தபஞ்செய்வதைவிட்டு, இனி மோக்ஷத்தை உத்தேசித்து இப்பொழுதே தபஞ் செய்யக்கடவீர்; இம்மந்திரத்தைச் செபித்தால் அவ் விந்திரன் சுகத்தை மாத்திரங் கொடுப்பானன்றி மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டான்; ஆதலால், நல்ல விரதமுடையவரே! நீர் எவ்விதமும் முத்தியின்பொருட்டுத்தபஞ்செய்யும்" என்றான். அது கேட்டு அருச்சுனன் கோபங்கொண்டு, "நானோ இராச்சியத்தை விரும்பினவனன்றி முத்தியை விரும்பினவனல்லன், எதற்காக நீர் இந்த வார்த்தை பேசுகின்றீர்; நான் வியாஸ முனிவருடையஉத்தரவின்படி இராச்சியத்தைவிரும்பி இத்தபஞ் செய்கின்றேன்; என்னைக் கெடுத்தற்கு நீர் என் முயலுகின்றீர்; இங்கு நின்றும் போய்விடும்" என்றான்.

உடனே இந்திரன் மகிழ்ந்து, ஐராவதயானை முதலிய உபகரணங்களோடு கூடியதாய் ஆச்சரியத்தையும் அழகையுமுடைய தன்வடிவத்தை அவ்வருச்சுனனுக்குக்காட்ட; அவ்வருச்சுனன் அவனைக்கண்டு, தன்பிதாவாதல்பற்றி வெட்கமடைந்தான். இந்திரன் அவ்வருச்சுனனைச் சமாதானஞ்செய்து, "அன்பனே நீ பூச்சியனுங் கிருதார்த்தனுமாகின்றாய்; உன் மனம் மிகவும் நிலையானது; உன்சத்துருக்களான துரியோதனன்முதலியோரோ பலவானகள்; துரோணரும் பீஷ்மரும் கர்ணனுமாகிய இவர்களை வெல்லுதல் எவருக்கும் அரு

மையாகும்; அவர்கள் என்னாலும் எவ்வழியாலும் வெல்லுதற்கரியவர்கள். உனக்கு நன்மையைச் சொல்லுகிறேன் கேள். இத்துரியோதனாதியரை வெல்லுதற்குச் சிவனைத்தவிர வேறு எவரிருக்கின்றார். ஆதலால், அருச்சுனனே நீ இப்பொழுதே சிவனை வழிபடு, அவரே சகலத்தையும் முடிக்குஞ் சத்திமானாயும்போகமோக்ஷபலனைக் கொடுப்பவராயு மிருக்கின்றார்; நானுஞ் சிவபூசை செய்கின்றேன்; பிரமாமுதலிய மற்றைத் தேவர்களுஞ்சகல வரங்களையுங் கொடுக்கும் விஷ்ணுவுஞ் சிவபூசை பண்ணுகின்றார்கள்; சத்துருக்களைச் செயிக்கவிரும்பும் மற்றையோரும் சிவபூசைசெய்தே சத்துரு ஜயமடைகின்றார்கள். ஆதலால், அருச்சுனனே நீ இன்று தொடங்கி என்மந்திரத்தை விட்டுப் பார்த்திவலிங்கமமைத்துச், சிவபெருமானைத் தியானித்து அநேக உபசாரங்களோடும் பூஜைசெய்து, எந்தவிதத்தினாலும் அவரையே வழிபடு. இப்படிச்செய்தால் அழிவில்லாத சித்தியுண்டாகும். இதிற் சந்தேகமின்று என்று சொல்லி, எல்லாவரங்களையுங் கொடுத்து, அருச்சுனா, இத்தபத்தை மிகுந்த அவதானத்துடனே சிறிது மசையாது ரக்ஷித்துக்கொள்; எப்பொழுதாவது தவறாதே. இராசசிரேஷ்டனே, உயர்ந்தவைகளுக்கு எவ்வளவோ விக்கினம் உண்டாகும்; அந்தக்காலத்தும் இப்பொழுதிற்போலத் தைரியத்துடனே ரக்ஷித்துக்கொள். சிவபெருமான் உனக்கு நல்ல பலனை யருளுவார் சந்தேகமின்று" என்று சொல்லி, அவனுக்கு வரங்கொடுத்து, தானிருக்குமிடத்துக்குப்போயினான்.

இந்திரன் போனபின்னர், அருச்சுனன் விதிப்படி ஸ்நானம் பண்ணிச், சாஸ்திரப்பிரகாரம் ஷடங்கநியாசந் தியானம் முதலிய வற்றைச்செய்து, ஒருகாலைநிலத்திலூன்றி நின்று, முனிசிரேஷ்டர்கள் போலக்கட்பார்வையைச்சூரியனிற்செலுத்திச் சிவ மூலமந்திரத்தைச் செபித்துக்கொண்டு, வியாஸமுனிவர்சொல்லியபடியே தவஞ்செய்தான்; அத்தபத்தின்தேஜஸ்ஸானது எங்கும் வியாபிக்கவே தேவர்கள் அதிசயமடைந்துசிவபெருமானிடத்துப்போய்ச், "சுவாமீ தேவரீரை விரும்பி அருச்சுனன் அருந்தபஞ் செய்கின்றான். பிரபுவே! அந்தநரன் விரும்பும் வரத்தைக் கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்து, அவரை நாநாவித ஸ்தோத்திரங்களினாலே துதித்தார்கள். சிவபெருமானது கேட்டு, "நீங்கள் போங்கள், உங்கள் காரியங்களை நானே செய்கிறேன் இது நிச்சயம்" என்று சொல்ல, அவர்கள் மனந்துணிந்து தத்தமிருப்பிடங்கட்குத் திரும்பிப் போனார்கள்.

இப்படி நிகழும்பொழுதில், மூகன் என்னும் அசுரன் வஞ்சகியும் துராத்மா†வுமாகிய துரியோதனனால் அனுப்பப்பட்டுப், பன்றிவடிவெடுத்து, மலையின் சிகரங்களையும் அநேக விருக்ஷங்களையும் முரித்துக்கொண்டு, மிகவுஞ் சத்தமிட்டு, மிகுந்தவேகத்துடனே அவ்வருச்சுனன் தபஞ்செய்யுமிடத்து வந்தான். அருச்சுனன் அதுகண்டு, இது கொல்லத்தகுந்ததா? கொல்லத்தகாததா? என்று எண்ணி, இது என்னை? எங்கிருந்து வருகி

---

† துராத்மா= கெட்டதன்மையுடையவன்.

றது? கொடுஞ்செய்கையுடையதாகக் காணப்படுகின்ற தே! இது என்னைக் கொல்லுதற்கே உத்தேசித்து வருகின்றது, நிச்சயமாக இதுஎன் சத்துருவே. என்று என் மனந் துணிகின்றது என்று சொல்லி, நான் முன் அநேக அரக்கர்களையும் அசுரர்களையுங் கொன்றிருக்கி ன்றேன். அவர்களைச்சேர்ந்த ஒருவன் முற்பகையைக் களைதற்கு இப்படி வருகின்றான்போலும், அல்லது துரியோதனனுக்கு நண்பனாகிய ஒருவன் அவனுக்கு இதஞ்செய்யும்பொருட்டே இப்படி வருகின்றான்போ லும், இதிற் சந்தேகமில்லை; எவனைக் கண்டவுடனே மனம் மகிழுமோ அவன் மித்துரு; எவனைக்கண்டவுட னே மனந் துக்கிக்குமோ அவன் சத்துரு; ஆசாரம் குலத்தைச் சொல்லும்; சரீரம் போசனத்தைச் சொல் லும்; பேச்சு அவன் கற்ற சாஸ்திரத்தைக் காட்டும்; கண் சிநேகத்தைக்காட்டும்; சரீரத்தினாலும், நடையி னாலும், சேஷ்டையினாலும்,பேச்சுக்களினாலும், மனோ வியாபாரத்தினாலும் மனக்கிடக்கை யறியப்படுவது. உச்சுவலம், ஸரஸம், வக்கிரம்,ஆரக்தம்‡என்று கட்பா ர்வை நான்குவிதமாகும். அவ்வவற்றின் சேஷ்டைக ளோ வெவ்வேறுபேதமாயிருக்கும். மித்திரனைக்கண்ட விடத்து உச்சுவலம்என்ற பார்வையும்,புத்திரனைக்கண்

‡ உச்சுவலம்=மிகவும் பிரகாசிப்பது.

ஸரஸம்=ரஸத்தோடு கூடியது.

வக்கிரம்=கோணலானது.

ஆரக்தம்=முழுதும் சிவந்தது

டவிடத்து ஸரஸம்என்றபார்வையும், காமினீஜனங்களைக் கண்டவிடத்து வக்கிரம் என்ற பார்வையும், சத்துருவைக் கண்டவிடத்து ஆரக்தம் என்ற பார்வையும் உண்டாகும். இவ்வசுரனைக்கண்டவிடத்து என்னுடைய சகல இந்திரியங்களும் கலங்குகின்றன; இவன் சத்துருவே, இவன் சந்தேகமின்றி என்னாற் கொல்லப்படுபவனே, என் பிதாவாகியவியாஸமுனிவரும் "அரசனே உனக்குத் துக்கங்கொடுப்பதைவிசாரணையின்றிநியமமாகக்கொல்லு" என்று அநுமதிகொடுத்திருக்கின்றார். இத்துஷ்டனைக்கொல்லும்பொருட்டே என்னாயுதங்கள் ரக்ஷிக்கப்பட்டிருக்கின்றன என்று எண்ணி, வில்லை வளைத்துப் பாணத்தைத் தொடுத்துக்கொண்டு நின்றான். சிவபெருமான் அரையிற் கச்சங் கட்டித், தலைமயிரைக் கொடிகளினாற் சுற்றிச், சரீரத்திலே வெண்பொடிகளால் ரேகைகளைக் கீறி, வில்லையும் அம்பையுங் கையிற்பிடித்து, அம்புக்கூட்டைப் புறத்திற்கட்டி, வேடுவராச வடிவங்கொண்டு, அருச்சுனனை ரக்ஷிக்கும்பொருட்டும், அவனைப் பரீக்ஷிக்கும்பொருட்டும் வந்தருளினார். சிவகணங்கள் வேடுவர்களாய் வந்தார்கள். இப்படியே வேடுவராச வடிவங்கொண்டசிவபெருமான், சிவகணங்கள் வேடுவர்களாய்த் தம்மைச் சூழ்ந்துவரத் தாம் சேனாபதியாகி, அநேக விதமான சப்தங்களைச் செய்துகொண்டு அப்பன்றியின் பின் போக, அதன் சத்தமும் இச்சேனையின் சத்தமும் ஆகாயத்தி

---

† காமினீ ஜனம்=காமமுடைய பெண்கள்.

னுண்டாகும் பிரதித்தொனியுடனே கூடிஅஷ்ட திக்கு களிலும் பரந்தன. அதுகேட்டு அருச்சுனனும் அம் மலையிலிருக்கின்றவர்களும் வியாகுல முடையராயினர். அப்பொழுது அருச்சுனன் எண்ணுகின்றான். ஐயையோ, என்ன நடக்குமோ,எனக்குச் சிவன் நன்மையையே செய்யட்டும், முன் கிருஷ்ணருஞ் சொல்லக்கேட்டிருக்கின்றேன், சிவபெருமானே நன்மையையுஞ்சுகத்தையும் எப்பொழுதுஞ் செய்பவர், அவரேபோக மோக்ஷங்களை நியமமாகக் கொடுப்பவர்; அவருடைய திருநாமங்களை நினைக்கின்றவனுக்கு நியமமாகக்ஷேமமுண்டாகும்; அவரை வழிபடுகின்றவர்களுக்கு எந்தவழியானும் துக்கமும் பாவமும் நீங்கிவிடும். அற்றேல், சிவபக்தர்களுக்குந் துக்கம் முதலியன காணப்படுகின்றனவே எனின்,— அவரை வழிபடுகின்றவர்களுக்கு ஒரோ வழித்துக்கங் காணப்படினும், அது பிராரத்த கர்மத்தினல் வந்ததென்று எண்ணத்தக்கது; பிராரத்தகர்மத்தினற் றுக்கம் வந்ததாயின் சிவ பஜனம் வீணுகுமே என்னில்; பிராரத்தகர்மபலத்தினல் அதிக துக்கம்வந்தபோதும் சிவபெருமான் அவருக்கு அற்ப துக்கத்தையேகொடுக்கின்றார், இதிற் சந்தேகமில்லை. இப்படியே அற்ப துக்கம் வராது அதிக துக்கம் வந்ததாயின் அதையுமப்பிராரத்த கர்மபோகமென்றே நாம் நிச்சயமாய் எண்ணவேண்டும்; அப்பொழுதும்சிவபெருமான் அதிகமாகக் கொடுபடவேண்டிய பலத்தை அதற்கேற்ப குறைத்துஅற்பமாகவேகொடுத்துப் போகத்தைநிரப்பத்தனதிச்சையினலே அத்துக்கத்தை ஒட்டுகின்றார் எ

பது நிச்சயம். இதிற்சந்தேகமின்று. சிவன் விஷத்தையும் அமிர்தமாக்குவார். அமிர்தத்தையும் விஷமாக்குவார். எதைவிரும்பினுரோ அதைச்செய்வார். சமர்த்தன் செய்வதை எவன் தடுக்கக்கூடும். அச்சிவபெருமான் தன்னடியவருக்கு எந்தவழியாற் சுகம்வருமோ அதையே செய்வார். பக்த ஜனங்களை ரக்ஷிக்கும் விரதம் அவராற் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலால் அவருடைய அடியவர்களுக்குச்சுகமேவரும் இது நிச்சயம்; அற்றேல், முன் இவ்விரதம் பிடிக்கப்பட்டிருந்தது இப்பொழுது அவரால் விடப்பட்டிருக்குமாயின் சுகம் எங்கிருந்துவரும் என்னில்; சுபபலனைக்கொடுத்து அடியவர்களை இரக்ஷித்தலிலே சிவபெருமானுக்கு எப்பொழுதும் அபிமானம் இருக்கின்றதென்பது நிச்சயம். இப்படியே நினைத்து என்னுலும் புராதனர்களாகிய இந்தப்பக்தர்களினுலும் மேல்வரும் அடியவர்களாலும் மனேதைரியம் ரக்ஷிக்கப்படுவது, செல்வம்போனுலும் போகட்டும்நின்ருலும் நிற்கட்டும், மரணமோ சமீபத்திலிருக்கிறது, ஜனங்கள் நிந்தித்தாலும் நிந்திக்கட்டும், துதித்தாலும் துதிக்கட்டும் துக்கக்கூட்டம் உண்டானுலும் உண்டாகட்டும், சங்கரன் எப்பொழுதும் சுகத்தையே கொடுப்பவராவர்; அற்றேல் இப்பொழுது ஏன் சுகங்கொடுத்திலர் எனின்; சிலகாலத்தில் பரீக்ஷிக்கும் பொருட்டு அவர் துக்கத்தைக்கொடுத்தாராயினும் அவர் தயாளுவாதலின்லே அவ்வற்ப துக்கத்தினந்தத்திலேபரமசுகத்தைக்கொடுப்பார். இதிற்சந்தேகமின்று. பொன்னுருக்கப்பட்டவிடத்து எப்படிச்சுத்தியடையு

மோ அதுபோலவே சிவபக்தன் இதனாற்சுத்தியடைகின்றான். இப்படியே வியாசமுனிவர் சொல்லக்கேட்டிருக்கின்றேன். ஸ்மிருதிகளிலும் வேதங்களிலும் இதுவே கூறப்பட்டிருக்கின்றது. இச்சிவபஜனையினாலே எனக்குஇப்பொழுதஞ்சுபமேயுண்டாகும்இதிற்சந்தேகமின்று. என்றுசொல்லி அருச்சுனன் அப்பன்றியிற் பாணப்பிரயோகஞ்செய்யும்வரையும் மனதில் ஆராய்ந்துகொண்டு நின்றான்.

நிற்கும்பொழுது அப்பன்றியுஞ்சமீபத்தில்வந்தது. சிவபெருமானும் என்பத்தனாகிய இவனை இப்பன்றி கொல்லாதிருக்கவேண்டும் என்று திருவுளங்கொண்டு, அதனைக்கொல்லும்பொருட்டு அதிசீக்கிரமாக அதன் பின்பக்கத்தைப்பற்றிவந்தார். இச்சிவபெருமானுக்கும் அவ்வருச்சுனனுக்கும் மத்தியிலே இப்பன்றியானது ஒரு பர்வத சிகரம்போலக்காணப்பட்டது. இந்தப் பன்றியின்மீது அவ்விருவரும் ஒரேகாலத்தில் பாணப் பிரயோகம் பண்ணினார்கள். சிவபெருமான் பிரயோகித்தபாணமானது வாலில் நுழைந்து முகத்தைப்பிளந்து வெளியிற்புறப்பட்டு விரைந்து சென்று பூமியில் விழுந்து மறைந்தது. அருச்சுனன் பிரயோகித்த பாணமானது முகத்திலே நுழைந்து வாலைப்பிளந்து வெளியிற்புறப்பட்டு அதன்பக்கத்திற்கிடந்தது. இவ்விருவரும் பிரயோகித்த பாணத்தினாலே அப்பன்றி இறந்துவிட, உடனே தேவர்கள் மிகுந்த சந்தோஷத்துடனே பூமழை பொழிந்தார்கள்; சிவபெருமானுந்திருவுளமகிழ்ந்தார்; அருச்சுனனுஞ் சுகமடைந்தான்; பின்னர் அ

விருவரும் அவ்வருச்சுனனுடைய குரூரமான ரூபத்தைப்பார்த்து நின்றார்கள். அருச்சுனன் இதனது கடத்தை உற்றுநோக்கி, மிருந்த ஆச்சரியமுடையவனாய், இதனைக்கொல்லும் பொருட்டு ஈசுவரனே இப்பொழுது எனக்குப்புத்தியை யீந்தருளினார். இதிற் சந்தேகமின்று, என்று எண்ணிச்" சிவ சிவ' என்று சொல்லிக்கொண்டு நின்றான்.

பன்றிவிழுந்தவுடனே சிவபெருமானாகியவேடர் அப்பன்றியிற் பிரயோகித்த பாணத்தை எடுத்து வரும்படி தன் கிங்கரனையனுப்பினார். அவன் பன்றியின் சமீபத்தில் வரவே அருச்சுனனும் வந்தான். அவ்விருவரும் ஒரே காலத்திற் சந்தித்தார்கள். அங்கே அருசசுனன் அக்கணதிபரை யதட்டிப்பாணத்தை எடுக்கக், கணதிபர் அவனைப்பார்த்து " ஓஇருஷி சிரேஷ்டனே ஏன் பாணத்தை எடுக்கிறாய், இது எங்களுடையபாணம், இதனை விட்டுவிடு," என்றார். அருச்சுனன் அதுகேட்டு "ஓ வேடா நீ மூடனாயிருக்கின்றாய், ஒன்றையும் ஆராயாது பேசுகின்றாய்; இப்பாணம் இப்பொழுதே என்னால் விடப்பட்டது; என் பெயர் தீட்டிய எழுத்தும், ஆகாரமும், * பிற்பக்கத்தில்ஒட்டிய மயிலிறகும் இப்பாணத்திலிருக்கின்றன. ஆதலால் இது என்னுடையதே, எப்படி உன்னுடையதாகும். உன்ஜாதி சொபாவம் ஒருவரா

* ஆகாரம=ஆகிருதி

னும் பரிகரிக்கத்தக்கதா யிருக்கின்றது." என்றான். அதுகேட்ட கஜுதிபராகிய வேடுவர் சிரித்து, "அடே நான் சொல்வதைக்கேள்; நீ தபஞ்செய்யவில்லை; நீ கொண்ட தபவேஷமும் வேஷமாத்திரமன்றி உண்மையானதாகக் காணப்படவில்லை, தபஞ்செய்பவன் ஏன் பொய் பேசுகிறான்; என்னைத் தனித்தவனென்று எண்ணாதே, நானே சேனாபதி; அநேக வேடுவகுழாத்தோடும் என் யசமானனும் சமீபத்திலிருக்கிறார்; அவரோ சகலத்தையும் முடிக்குஞ் சாமர்த்தியவான், நிக்கிரகானுக்கிரகங்களையுஞ் செய்வார்; அவர் செலுத்திய பாணமே இங்கே இருக்கின்றது; அதனையே இப்பொழுது நீ எடுத்தாய்; அது ஒருபொழுதும் உன் பக்கத்திலிருக்கவில்லை; ஓ இருவழியே நீ என் தவப்பயனை விடவிரும்புகிறாய்; களவினாலும், வஞ்சகத்தினாலும், அபிமானத்தினாலும், ஆச்சரியத்தினாலும், உண்மைதப்புதலினாலும், தபமழியும், இதுசத்தியம். என்று நான்கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆதலால் நீ செய்யுந் தபத்திற்குப் பலம் எங்கிருந்து வரும், நீ இப்பாணத்தை விட்டுவிடு விடாத பக்ஷத்தில் நீசெய்ந் நன்றி கொன்றவனாவாய் நீஉயிர்பிழைக்குங்காரணமாக என்ஸ்வாமி இப்பாணத்தை இப்பன்றியிற் பிரயோகித்தார் என்பது நிச்சயம், இந்த அம்பினாற்றான் உன் சத்துருவாகிய அசுரன் கொல்லப்பட்டான், இந்தப்பாணத்தை நீ உன்னுடையதென்று எடுக்கிறாய், அதனால் நீ மிக

நன்றியற்றவனாகக்காணப்படுகிறாய். உன் பாப சுபாலனைக்கொடுக்கக்கூடிய வழியையறிந்து நீ செய் யவேண்டியதைச்செய், நீயோ உண்மைபேசுகிறவன் போல் வீணாயானை விரும்புகிறாய், உனக்குப்பாணம் வேண்டுமாயின் என்பாசமானனிடம் யாசித்துப்பெ ற்றுக்கொள். இவ்வொருபாணம் மாத்திரம் அவரிட மிருக்கின்றது என்று எண்ணாதே. என்னுடைய ராஜாவாகிய அவர் இதுபோன்ற அநேக பாணங் களைத்தாமே கொடுக்க வல்லவராயிருக்கின்றார். நீ ஏன் அவரிடம் வந்து யாசிக்கின்றாயில்லை; என் பிரபுவை நீ பிரார்த்தித்தாயாயின் அவர் பாணத்தை மாத்திரமன்று வேறுவிசேஷ பலன்களையுங் கொடுப் பார். உபகாரஞ் செய்தலைவிட்டு அபகாரஞ்செய்ய விரும்புகிறாய். அவருக்கு ஏற்ற காரியங்களைச் செய் கின்றிலை. இனி ஆராயாது செய்யுமிச்செயலைவிட்டு விடு" என்றார்.

உடனே அருச்சுனன் வேடனைநோக்கி "ஓ வேடா, நீ பொய் சொல்கின்றாய்; உன்ஜாதியைப் போலவே உன்னையு மறிந்திருக்கின்றேன். நானோ அரசன், நீயோ சோரன்; உன்னோடியுத்தஞ்செய்தல் எனக்குத்தகாது. யுத்தத்தையும் சிநேகத்தையும் ஒத்தவரோடு செய்தல் வேண்டும்; தாழ்ந்தவரோடு எப்பொழுதாவது செய்யக்கூடாது. [illegible] சுவாமி யுடனே யுத்தஞ்செய்வேன் [illegible] உன்

சுவாமியும் உன்னைப்போன்றவனாதலால் அவனுட
னும் யான் யுத்தஞ்செய்தல் கூடாது; உன்னரசனை
யாசிக்கலாம் என்பையாயின், நாங்களோ தாதாக்கள்,
வேடர்களாகிய நீங்களோ சோரர்கள், இருவருக்கும்
வேற்றுமை பெரிதாதலால் நான் உன்னரசனிடம்
எப்படியாசிக்கலாம்; ஓ வேடா நீ உன்னரசனாகிய
அவனிடத்தில் பாணத்தை ஏன் யாசிக்கின்றாயில்லை.
அப்படிச்செய்யாது ஏன் என்னிடம் யாசிக்கின்றாய்;
என்னை யாசித்தாயாயின் உனக்குப்பாணத்தைக்கொ
டுக்கிறேன்; என்னிடம் அநேக பாணங்கள் இரு
கின்றன; நீ கொண்ட பிடிவாதத்திற்காக அரச
யுள்ளவன் பாணங்கொடுக்கமாட்டான்; கொ
தால் அவன் புல்லுக்கு ஒப்பாவான். ஆதலால்
டனே நான் உனக்கு எப்படிப்பாணங் கொடுப்பே
நீ பாணத்தைப்பெற்றுக்கொள்ள விரும்புவாயாயி
இப்பொழுதேவந்து என்னிடம்பெற்றுக்கொள்
வில்லை. உன்யசமானன் என்முன்வராது போன
போலவே நீயும் போய்விடு; ஏன் இங்கு நின்று வீ
கப்பிதற்றுகிறாய். இப்படி யல்லாவிடத்து உ
யசமானன் வந்து என்னோடு யுத்தஞ் செய்து என்
வென்று பாணத்தைப்பெற்றுக்கொண்டு சுகமா
போகட்டும், ஏன் காலதாமஸஞ்செய்கின்றான்" எ
றான்.

கணநிபர் அதுகேட்டு அருச்சுனனை நோ

" அடே நீ இருஷியல்ல, மூடனாயிருக்கின்றாய், என் மரணமடைய விரும்புகிறாய், இப்பாணத்தை எனக்குக்கொடுத்து க்ஷேமத்துடனிரு: இப்படியல்லாவிடத்துக்கிலேசத்துக்குப்பாத்திரனாவாய் " என்று சொல்ல,அருச்சுனன் " வேடனே கேள்,உன்ஸ்வாமி இங்கே எப்பொழுதுவருவானோ அப்பொழுது அவனுடன் என் பலத்தைக்காட்டுவேன், சிங்கத்துக்கும் நரிக்கும் நடக்கும் யுத்தம்மிகவும் பரிகசிக்கத்தக்கதாகும்; நீகேட்கும்படிநான் சொன்ன விஷயங்களை அப்பொழுதே பார்த்துக்கொள்;இனி நீவிரும்பியபடியே செய் " என்று சொன்னபொழுது, அக்கணாதிபர் சிவபெருமானாகிய வேடுவச்சேனாதிபதியிடம் போய்ச் சகலத்தையும் அறிவித்தார்.

வேடுவரூபங்கொண்டெழுந்தருளிவந்த சிவபெருமான் அதுகேட்டுத் திருவுளமகிழ்ந்து, தமது சேனையுடனே அருச்சுனன் நிற்குமிடத்துக்கு வந்தார். அருச்சுனனும் வேடுவச்சேனைக்கு எதிரேசென்றான், சிவபெருமானாகிய வேடுவராசர் தன் கணாதிபரையழைத்து " நீ அருச்சுனனிடம்போய்,ஓ தபத்தியே எங்கள் சேனையைப்பார்,இப்பொழுது இப்பாணத்தைக்கொடுத்துவிடு; சொற்பகாரியத்தின் பொருட்டு என் மரணத்தை விரும்புகிறாய்; உன் சகோதரர்கள் துக்கத்தினாற் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்; உன் மனைவியோ அவரினும் அதிக துக்கமுற்றிருக்கின்

ருள்; பூமி உன்கையினின்றுந் தவறிப்போகிறது,
என்று எண்ணுகிறேன்." என்று இதனைச் சொல்லி
வருப்படி பின்னரும் அனுப்பினார். கணதிபர் வந்து
அவற்றை அருச்சுனனுக்கு அறிவிக்க, அவன் அக்
கணதிபரை நோக்கி "வெல்விதோல்விகளில் விப
ரீதமையுண்டாகும். இப்பொழுது நான் இப்பன
த்தை உனக்குக்கொடுத்தேனாயின் என் குலத்தவர்
கள் என்னை நிச்சயமாய்த் தூஷிப்பார்கள்; என் சகோ
தரர்களுந் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாவா
கள்; கோடாலிடத்தில் இவைகள் ஒன்றும் உண்
டாகா; இது நிச்சயம்; என்வித்தைகளும் பயனற்
றவைகளாகா; ஆதலால் விரைந்துவரச்சொல்லு. சி
கும் நினைக்கண்டு பயந்தது என்பதை நான் கேட்ட
தேயில்லை" என்று சொல்ல, அக்கணதிபர் திரு
ம்பிப்போய் அவற்றைச்சிவபெருமானுக்கு விண்ண
ப்பஞ்செய்தார். அவர் அதனைக்கேட்டு அருச்சுன
மகிழ்ச்சியோடு கிராதுயுத்தத்துக்கு வந்தருளினார்.

அருச்சுனனும் அதுகண்டு சிவபெருமானை
தியானித்துக்கொண்டு அங்கே போய் மிகப்பயங்
மான யுத்தஞ்செய்தான். கணங்கள் பலவகைப்பட
ஆயுதங்களையும் அவ்வருச்சுனன் மீது பிரயோகி
அவனை வருத்தின. அருச்சுனன் அக்கணங்
பொழிந்த பாணபங்கிகளையறுக்க அவைகள்
சஸ்திரங்களை எறிந்தன. அருச்சுனன் அவ
யும் அழிந்தார் [illegible]

பொழிந்தான். அப்பாணங்களுக்குச் சிவகணங்கள்
பத்துத்திக்கிலும் ஓடின; இக்கணங்கள் சிவபெரு
மான் தடுத்தவிடத்தும் அவ்வருச்சுனனுக்கு எதிரா
செல்ல உடன்பட்டில. அதன்பின் சிவபெருமானும்
அருச்சுனனைக் குறித்துத் திருவுளத்திற் றிருவருள்
கொண்டு அவனோடு எதிர்த்தருளினார். அப்பொழுது
அருச்சுனனும் எதிர்த்து வெட்டுவாளுங்கொண்டு
வந்த சிவபெருமான்மீது ஆயுதங்களைப்பிரயோகித்
தான்; சிவபெருமானும் அவன் செலுத்திய ஆயுதங்
களை யெல்லாம் அழித்து, அவனணிந்தகவசத்தையுங்
கிழித்து, அவனைச்சரீரமாத்திர முடையவனாக்கினர்.
ஆயுதங்களிழந்தவனாகிய அவ்வருச்சுனன் சிவபெரு
மானுடனே மல்ல யுத்தஞ்செய்தான். சமுத்திரத்
தாற் சூழப்பட்ட பூமியும் இவர்கள் பாரத்தைத்தாங்
மாட்டாமற் றுக்கமுற்றது, ஐயையோ இனியாது
நடக்குமோ என்று தேவர்களுந்துக்கமுற்றார்கள்.
அதுகண்டு சிவபெருமான் ஆகாயத்திற்சென்று அங்
குநின்றும் யுத்தஞ்செய்தார். அருச்சுனனும் அப்
படியே ஆகாயத்திற் சென்று அங்குநின்று யுத்தஞ்
செய்தான். சிவபெருமானும் அருச்சுனனும் ஒரு
வர்மீதுஒருவர் பாய்ந்துமல்லயுத்தஞ்செய்யும்போது,
அருச்சுனன்சமயம்பார்த்துச்சிவபெருமானை இரண்டு
பாதங்களிலும் பிடித்துத்தூக்கிச்சுழற்றினன். சிவ
பெருமான் தான் பக்தவற்சலர் என்பதைக்காட்டுதற்
காகவே இவ்வருச்சுனனோடு சமமாய்நின்று யுத்தஞ்

செய்து அவனால் இப்படிச்சுழற்றப்பட்டார்.

பின்பு சிவபெருமான் அவன் கையினின்றும் விலகித்தூரத்திற்சென்று சிரித்துக்கொண்டு, எவர்களுக்கும் அதிசயத்தையுண்டுபண்ணுவதாய் அழகிற்சிறந்த தமது திவ்வியரூபத்தைக்காட்டியருள, அருச்சுனன் வேதசாஸ்திர புராணங்களிற்சொல்லப்பட்ட புராதனபுருஷோத்தமராகிய அவரைத்தரிசித்துச், சர்வலோகைக நாயகராகிய இச்சிவபெருமானோடு தான் யுத்தஞ்செய்தமையைக்குறித்து வெட்கமுடையவனாய், ஐயையோ இவர் சிவபெருமானல்லவா! சிவபெருமானல்லவா! எனக்குந்திரிலோகங்களுக்குந்தலைவர் இவரே, நான் இவருக்கு இப்பொழுது என்ன குற்றஞ்செய்தேன், ஈசுரனுடையமாயையே பலமுடையதாயிருக்கின்றது, அது மாயிகளுக்கும் அதிக மாயஞ் செய்வது, என் யசமானனாகிய இவர் தன் சொரூபத்தை மறைத்துவந்து என்னசெய்தார், இவரால் நான் வஞ்சிக்கப்பட்டேனே என்று எண்ணிச், "சுவாமீ க்ஷமிககவேண்டும்க்ஷமிக்கவேண்டும்" என்று அடிக்கடி சொல்லி அவருடையபாதங்களில்விழுந்து நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டுக்கொண்டு நின்று மகாதேவரே, தேவரீரே எவருக்குஞ் சுகஞ்செய்பவராயிருக்கின்றீர், அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். சிவபெருமான் புன்முறுவல்செய்து அருச்சுனனைச் சமாதானப்படுத்திப், புத்திரனிலும் மிக இனியவனே

நீ என்னன்பனாயிருக்கின்றாய், உன்னைப்பரீக்ஷிக்கும் பொருட்டே நான் இப்படிச்செய்தேன், இனிக் கவலையை விட்டுவிடு என்று திருவாய் மலர்ந்து, அவனைத்தமது அருமைத்திருக்கரங்களிரண்டாலும் எடுத்துத் தன் கணங்களினாலும் சர்வத்துக்கும் அதிபதியாகிய தம்முடைய ஐசுவரியய்முதலிய குணங்களினாலும் அவன் கொண்ட வெட்கத்தைப்போக்கி உற்சாகமுடையவனாக்கி, "அன்பனே நான் உன்னிடத்தில் மகிழ்ந்தேன், நீ என்மீது ஆயுதப்பிரயோகஞ் செய்ததை நீ அன்போடு எனக்குச்செய்த பூசையாக நான் ஏற்றுக்கொண்டேன், அது உனக்கு அபராதமாகமாட்டாது, உனக்குக்கொடுக்கக்கூடாதது ஒன்றுமில்லை. எந்த வரத்தை விரும்புகின்றாயோ அதைக்கேள்; ஓ, அரசனே சத்துருக்களிடத்திலே உன்னுடைய அற்புதமானகிர்த்திகையப்பிரகாசிப்பிக்கும்பொருட்டு என்னை வேடனென்று கருதி என்னோடு யுத்தஞ் செய்தாய், துக்கத்தை நீக்கு" என்று திருவாய் மலர்ந்தருளினார். அருச்சுனன் சிவபெருமானை நோக்கித், தேவரீர் தேவேந்திரஞ்செய்யப்படுபவரும் மகாதேவரும் கிருபாலுவுமாயிருக்கின்றீர்; தேவதேவனே, கைலாஸபதியே, எப்பொழுதும் நன்மையைச்செய்பவரே, பஞ்சவக்திரனே, திருச்சடையையும் மூன்று திருக்கண்களையும் சர்ப்பங்களாலும் உருத்திராக்ஷங்களாலு மாயகுண்டலத்தையும் உடையவரே, நன்முகமுடையவரே, புன்சிரிப்புப்பொருந்திய திருமுக

முடையவரே, நீலகண்டரே, அடியவர்க்கருளும்
பொருட்டு உடனுடனே உருவம் எடுப்பவரே, இட
பக்கொடியை யுடையவரே, வாமபாகத்திற் பார்வதீ
தேவியை யுடையவரே, பத்துத்திருப்புஜங்களை
யுடையவரே, பரமான்ம சொரூபியே; டமருகம் கபா
லம் இவற்றைத்தாங்கிய திருக்கரமுடையவரே, கபா
லமாலை யணிந்தவரே, சுத்தமான பளிங்குபோன்
றவரே, கர்ப்பூரம் போலும் வெண்ணிறமுடையவரே,
பிநாகபாணியே, திரிசூலத்தையும் வரதத்தையுந்
தரித்த திருக்கரமுடையவரே, புலித்தோலுத்தரீய
மணிந்தவரே, யானைத்தோலாடையைத்தரித்தவரே,
பாம்புகளையணிந்த அங்கங்களையுடையவரே, கங்கை
யைத்தரித்தவரே, நல்ல திருவடியையுடையவரே,
முத்தியைக்கொடுப்பவரே, நிர்க்குணரே, அடியவர்
கள்பொருட்டுக்கொள்ளப்பட்ட குணரூபியே, தேவ
ரீருக்கு நமஸ்காரம். உலகத்திற்காணப்படுஞ்செள
ந்தரியரூபமெல்லாம் தேவரீருடையதேஜஸே. தே
வனே தேவரீருடைய குணங்களையளவிடற்கு வே
தங்களும் சாமர்த்தியமுடையனவல்லவாயின் சத
சிவனே மந்தபுத்தியுடையவனாகிய யான் எப்ப
வர்ணிப்பேன். எல்லாமாயிருக்கின்றவரே தேவ
ருக்கு நமஸ்காரம். அடியேனுக்கருள்செய்தரு
வேண்டும் என்று சிவபெருமானைத்தோத்திரஞ்செ
தான்.

சிவபெருமான் அருச்சுனனைத்திருநோக்க

செய்து, "அன்பனே உனக்கு வேண்டிய வரங்களைச் சீக்கிரங் கேட்பாயாக. கொடுக்கின்றேன்." என்று திருவாய் மலர்ந்தருள, அருச்சுனன் அவரை வணங்கித், தேவரீர் "அடியேன்மீது பிரியமுடையவராக வேண்டும். தேவரீரோ ஸர்வாந்தர்யாமியா யிருக்கின்றீராதலால் எனதிஷ்டம் முழுதையும் அறிவீர், ஆயினும் பிரபுவே, எனக்கு வேண்டிய வரத்தைக்கேட்கின்றேன், தேவரீரைத்தரிசித்த மாத்திரத்தில் அடியேனுக்குச்சத்துருக்களாலுண்டாகிய கஷ்டம் முழுதும் நீங்கிவிட்டன, அடியேன் இம்மைப்பயனாகிய கீர்த்தியை யடையும்படி அருள்செய்யும்" என்று பிரார்த்தித்து அவரை நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிபந்தனஞ் செய்து நின்றான்; சிவபெருமானும் அவ்வருச்சுனனைப் பூரண பக்தியுடையவனாக அறிந்து, பிரமாண்டத்திலே பிறரால் வெல்லக்கூடாததாய தம்முடைய பாசுபதாஸ்திரத்தைக்கொடுத்து, "அருச்சுனா நீ எவராலும் வெல்லுதற்கரியனானாய். நீ இந்தப்பாசுபதாஸ்திரத்தினாலே சகல சத்துருக்களையும் வென்று உலோகத்துக்கு க்ஷேமஞ் செய்யக்கடவாய். உனக்குத்துணைசெய்யும்படி கிருஷ்ணனிடத்துஞ் சொல்லுகின்றேன். அவன் எனது அம்சனாயிருக்கின்றான், அவன் உனக்குச்சகாயஞ்செய்து உன் காரியத்தை முடிப்பான், நீ தடையில்லாமல் ராச்சியத்தை நடாத்தி யாகம் முதலிய அநேகதர்மங்களைச் செய்வாயாக" என்று திருவாய் மலர்ந்து, தமது

திருக்கரத்தை அவனுடைய தலையில் வைத்து, அவனைக்கொண்டு தமக்குப்பூசைசெய்வித்து, அவனைத் தமது திருமார்போடணைத்துத்தழுவித் தாம் பக்தவற்சலர் என்பதை வெளிப்படுத்தி, அவனுக்குச்சயங் கொடுத்து, அவன் பூசையையங்கீகரித்து மறைந்தருளினர். அப்பொழுது தேவதுந்துபிகள் ஒலித்தன, பூமழை பொழிந்தது, தேவப்பெண்கள் கூத்தாடினார்கள். தேவர்கள் தந்தம் ஆயுதங்களை அவனுக்குக் கொடுத்தார்கள்.

அருச்சுனன் தேவர்களினால் உபசரிக்கப்பட்டவனாகி, வரம்பெற்றுத்தனதாச்சிரமத்திற்கு வந்து தருமரை நமஸ்கரித்தான்; தருமர் முதலிய சகோதரர்கள் தங்கள் சரீரத்திற்குப்பிராணனைப்போல வந்தவனாகிய அவ்வருச்சுனனோடு கூடிச்சுகமடைந்தார்கள். திரௌபதியுஞ் சுகமடைந்தாள். அவ்வாச்சிரமத்திலே சுபபலனைக்குறிப்பிக்கும் பொருட்டுச்சந்தனத் தோடுகூடிய பூமழை பொழிந்தது. பாண்டவர்கள் யாவரும் நன்மையைக்கொடுப்பதும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்குவதுமான அவ்வருச்சுனனுடைய தபத்தில் நடந்த விருத்தாந்தங்களைக்கேட்டுச் சி பெருமானே எவராலுஞ்சேவிக்கப்படுபவர் என் சொல்லிச்சகல சுகங்களையுங் கொடுக்கும் அச்சி பெருமானை நமஸ்கரித்துச் சந்தோஷமுடையராய்ப் பின்பு தங்களுக்கு வெற்றிக்காலம் வந்தமை யறிந்து வெற்றியுண்டாகுமென்று நிச்சயித்து இரு

தார்கள். அருச்சுனன் தபஞ்செய்து சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்று வந்தமையைக் கிருஷ்ணர் கேள்விப்பட்டு வந்து, சகல விருத்தாந்தங்களையுங் கேட்டுச்சந்தோஷமடைந்து, இதனுற்றான் சிவபெருமானே சகலதுக்கங்களையும் போக்குபவர்என்று நான் முன்னே சொன்னேன், அவர் என்னாலுஞ் சேவிக்கப்படுபவர், உங்களாலும் சேவிக்கப்படுபவர் என்று சொல்லித்துவாரகையையடைந்தார்.

இங்ஙனமாகவே, நரநாராயணர்களாகிய கிருஷ்ணர் அருச்சுனர் முதலியோராலும், வியாஸர்முதலிய மகாரிஷிகளாலும், உலகத்தில் எவராலும் சேவிக்கப்படுபவரும், அங்ஙனஞ் சேவித்தவிடத்து அவர்க்குத் திருவருள் செய்பவரும் சிவபெருமானே என்பது பெறப்பட்டது. ஆதலால், நல்வினை தீவினை என்னும் இருவினைகளினால் இழுப்புண்டு சுவர்க்கம் நரகம் பூமியென்னும் இவ்விடங்களில்பிறந்து இறந்து நிலையில்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல அலையும் பசுக்களாகிய நாங்கள், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் எங்கள் பொருட்டாகச்செய்து, எங்களுக்குத் திருவருள் செய்தலையே தமக்கு நித்திய விரதமாகக்கொண்ட பரங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமானை வழிபடுவோமாயின், அவர் நமக்கு இம்மையில் வேண்டிய வேண்டிய பயன்களனைத்தையு

மீந்தருளி, மறுமையிற் பிறந்திறவாப் பெருவாழ்வாகியநித்திய நிரதிசயானந்தத் தைப்பயக்கும் மோக்ஷத்தையுங்கொடுத்தருளுவர்.

" நின்றுமிருந்துங்கிடந்து நடந்து நினை
யென்றுஞ் சிவன்றாளிணை."

---

திருச்சிற்றம்பலம்

---

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 14 | ஒபிதாமகரே | ஓபிதாமகரே |
| ,, | 24 | எவனடை;வான் | எவனடைவான்; |
| 8 | 12 | நராவதார முடைமையினலே | நராவதாரமுடையவனாதலால் |
| 9 | 2 | சுவல்ப்ப | சுவல்ப |
| 10 | 7 | பிதாவாகிய | பிதாமகராகிய |
| 35 | 20 | பெர்ருட்டாக | பொருட்டாக |